
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 231 | 4 Pages | 19.3.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 231 | 4 பக்கங்கள் | 19.3.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சி லிருந்த உயிர்க்கு**

**விளக்கம்:**
(நோய்களுக்கு இடமாகிய) உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரையில் அமையவில்லையோ.

# கழிவுநீர் குழியில் மூழ்கி உயிரிழந்த குழந்தையின் குடும்பத்தினருக்கு நிதியுதவி: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை மார்ச்.19

தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி.ஆண்டிப்பட்டி கிராமத்தில் வசித்துவரும் சந்தனகருப்பு – கிருஷ்ணவேணி தம்பதியரின் இரண்டு குழந்தைகள் கேசவன் (வயது 4) மற்றும் ரோஷன் ஆகிய இருவரும் கடந்த 15.3.2025 அன்று மாலை 4.00 மணியளவில் வீட்டினருகே விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அருகிலிருந்த கழிவுநீர்க் குழியில் விழுந்துள்ளனர். இச்சம்பவத்தில் நீரில் தத்தளித்த ரோஷன் அருகில் இருந்தவர்களால் மீட்கப்பட்ட நிலையில் மற்றொரு குழந்தை கேசவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்த துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.



இச்சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை கேசவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உக்ரைனிய ஆயுத படைகளின் புதிய தலைவர் நியமனம்: ஜெலன்ஸ்கி அறிவிப்பு



கீவ், மார்ச்.19

ரஷியா மற்றும் உக்ரைன் இடையே 2022ம் ஆண்டு பிப்ரவரி 24ந்தேதி போர் மூண்டது. நேட்டோவில் இணையும் உக்ரைனின் முடிவுக்கு எதிராக நடந்த இந்த போரில், அந்நாட்டின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷியா தொடக்கத்தில் கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் பதிலடி கொடுத்து பின்னர் மீட்டது.

போரானது 3 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. இதற்கேற்ப, அந்நாடுகள் ராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

போர் தொடங்கிய பின்பு, உக்ரைனில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில், உக்ரைன் ஆயுத படைகளின் புதிய தலைவராக ஆண்ட்ரி நேட்டோவ் என்பவரை அதிபர் ஜெலன்ஸ்கி நியமனம் செய்து உள்ளார். உக்ரைனின் அனாடலி பார்ஹைலெவிச் என்பவர்கடந்த 2024ம் ஆண்டு பிப்ரவரி முதல் இந்த பதவியை வகித்து வந்த நிலையில், இந்த மாற்றம் பற்றிய அறிவிப்பு வெளியாகி உள்ளது.

போர் திறனை மேம்படுத்தும் வகையில், ஆயுத படைகளை நாங்கள் திட்டமிட்ட முறையில் உருமாற்றியுள்ளோம் என அதுபற்றி பாதுகாப்பு மந்திரி ருஸ்டெம் உமரோவ் கூறியுள்ளார். எனினும், அவர் குழுவில் ஒருவராக தொடர்ந்து நீடிப்பார் என உமரோவ் உறுதிப்படுத்தி உள்ளார்.

இதனால், உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஐ.ஜி.யாக பார்ஹைலெவிச்இனிசெயல்படுவார்.ராணுவத்தின்நிலைப்பாடுகளை ஒட்டுமொத்த அளவில் மேற்பார்வை செய்வதுடன், ராணுவ ஒழுக்கம் வலுப்படும் வகையிலான பணிகளையும் அவர் கவனிப்பார் என்று உமரோவ் கூறியுள்ளார்.

இதேபோன்று, ஆயுத படைகளின் தளபதியாக, அலெக்சாண்டர் சிர்ஸ்கை தொடர்ந்து பதவி வகிப்பார். ரஷியா முழு அளவில் படையெடுப்பை தொடங்கிய 2022ம் ஆண்டு முதல், அதிபர் ஜெலன்ஸ்கி, அரசு மற்றும் ராணுவத்தில் அடிக்கடி அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்களை செய்து வருகிறார்.

## சுனிதா வில்லியம்ஸ், பூமிக்கு திரும்புகிறார்: நேரலையில் ஒளிபரப்ப நாசா ஏற்பாடு

வாஷிங்டன், மார்ச்.19

விண்வெளியில் ஆராய்ச்சிக்காக சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின் சார்பில் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோரும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் போயிங் ஸ்டார்லைனர் என்ற விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

8 நாட்கள் தங்கி இருந்து பூமிக்கு திரும்ப வேண்டிய அவர்கள், போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறுகாரணமாகஅங்கேயேதங்கவேண்டியதாயிற்று.அடுத்தடுத்து நடந்த தொடர் முயற்சிகளிலும் சிக்கல் ஏற்பட்டதால் அவர்கள் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் அவர்கள் 9 மாதங்கள் விண்வெளி மையத்திலேயே தவித்து வந்தனர்.

எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் மூலம் சுனிதா வில்லியம்சை பூமிக்கு அழைத்துவர அமெரிக்காவின் புதிய அரசு முயற்சி செய்தது.

இதையடுத்து ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் குரு டிராகன் என்ற விண்கலம், பால்கன்9 என்ற ராக்கெட் மூலம் கடந்த சனிக்கிழமை விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இந்த மீட்பு விண்கலத்தில் ரஷிய நாட்டை சேர்ந்த கிரில்பெஸ்கோவ் உள்ளிட்ட 4 விண்வெளி வீரர்கள் இருந்தனர். அந்த விண்கலம் நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது.

இதையடுத்துசுனிதாவில்லியம்ஸ், வில்மோர்ஆகியோர்விண்வெளி நிலையத்தில் இருந்து, குரு டிராகன் விண்கலத்துக்கு சென்றனர்.குரு டிராகன்விண்கலம், நேற்று இரவு 10.45 மணிக்கு (அமெரிக்க நேரப்படி) விண்வெளி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டது. இதையடுத்து அந்த விண்கலம் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை 5.57 மணிக்கு அமெரிக்காவின் புளோரிடா கடல் பகுதிக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தனது எக்ஸ் பக்கத்தில், வானிலை சீராக இருந்தால் குரு டிராகன் விண்கலம் இன்று மாலைபுளோரிடாகடல்பகுதியைவந்தடையும்என்றுதெரிவித்துள்ளது. இதன் மூலம் 9 மாதங்களுக்கு பிறகு சுனிதா வில்லியம்ஸ் பூமியில் கால் பதிக்கவுள்ளார். இந்த நிகழ்ச்சியை நேரலையாக ஒளிபரப்ப நாசா ஏற்பாடு செய்துள்ளது.

## ஜப்பானில் மலையேற்றத்துக்கு ரூ.2,300 கட்டணம்

டோக்கியோ, மார்ச்.19

ஜப்பான்தலைநகர்டோக்கியோவில்பியூஜிஎரிமலைஅமைந்துள்ளது. நாட்டின் மிக உயரமான இந்த எரிமலை மலையேற்றத்துக்கு சிறந்த இடமாகவும் உள்ளது. இதனால் வெளிநாட்டைச் சேர்ந்த சாகச வீரர்களும் இங்கு வந்து செல்கின்றனர். அந்தவகையில் கடந்த ஆண்டு 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் அங்கு மலையேற்றத்தில் ஈடுபட்டனர். எனவே பியூஜி மலையில் மக்கள் நெரிசல் அதிகமாக காணப்படுகிறது.

இதன் காரணமாக அங்கு சுற்றுச்சூழலும் வெகுவாக மாசடைந்து வருகிறது. எனவே இதனை கட்டுப்படுத்த பியூஜி மலையில் ஏறுவதற்கு புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டு உள்ளன. அதன்படி மலையேற்றத்தில் ஈடுபடும் சாகச வீரர்களுக்கு ரூ.2,300 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. மேலும் இணையம் மூலம் முன்பதிவு செய்வதற்கான அதிகபட்ச வரம்பையும் சுற்றுச்சூழல் அமைச்சகம் கொண்டு வந்துள்ளது.

## கொடூரம்... ஒன்றரை வயது குழந்தையை சுவற்றில் மோதி கொலை செய்த தந்தை!

தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சிஎழுமாத்தூரில்வசித்து வருபவர்கள் குமார் பாண்டிசெல்வி தம்பதியர். இவர்களுக்கு நான்கு வயதில் ஆண் குழந்தையும், ஒன்றரை வயதில் இரட்டை குழந்தைகளும் உள்ளனர். கடந்த சில நாட்களாகவே தம்பதியினருக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதையடுத்து நேற்று பாண்டிசெல்வி தனது 4 மற்றும் இரட்டைக்குழந்தைகளில் ஒன்றையும் அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றிருந்தார். அப்போது வீட்டில் குமாரும் இரட்டைக்குழந்தைகளில் மற்றொன்றும் இருந்தனர். அப்போது பாண்டிசெல்வி மீது ஆத்திரத்தில் இருந்த குமார், தூரியில் தூங்கிக் கொண்டிருந்த பெண் குழந்தையை வேகமாக ஆட்டி விட்டுள்ளார். இதில், உறங்கிக் கொண்டிருந்த குழந்தையின் தலை சுவற்றில் மோதி மயக்கமடைந்து விட்டது. மனைவியிடம் குழந்தை மூச்சுப் பேச்சு இல்லாமல் இருப்பதாக குமார் நாடகமாடியுள்ளார். உடனடியாக குழந்தையின் உடலை பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொண்டு சென்றனர். மருத்துவர்கள் பரிசோதித்து தலையில் பலத்தகாயம் ஏற்பட்டதால் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.



இதனையடுத்து குமாரிடம் மொடக்குறிச்சி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்போது குமார், குழந்தையை சுவற்றில் மோதி கொலை செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார். இதையடுத்து குமாரை கைது செய்த போலீசார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தந்தையே பெற்ற மகளை சுவற்றில் மோதி கொலை செய்த சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## ஈரோடு மாநகராட்சிக்கு வாடகை செலுத்தாத 31 கடைகளுக்கு 'சீல்' வைத்து அதிகாரிகள் நடவடிக்கை

ஈரோட்டில் மாநகராட்சிக்குச் சொந்தமான கனி மார்க்கெட் வணிக வளாகத்தில் 300க்கும் மேற்பட்ட ஜவுளி கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட கடைகளுக்கு 12 மாத வாடகையும், பொது ஏலத்தில் விடப்பட்ட கடைகளுக்கு 8 மாத வாடகையும் வைப்புத் தொகையாக பெறப்பட்டது. இந்நிலையில், வாடகை செலுத்தாத 25 கடைகளுக்கு ஈரோடு மாநகராட்சி அதிகாரிகள் 'சீல்' வைக்க முடிவு செய்தனா்.

அதன்படி, சுகாதாரத் துறை கண்காணிப்பாளா் ராதாகிருஷ்ணன், உதவி வருவாய் அலுவலா்கள் குமரவேல், பூமணி, சிவக்குமாா், மைய அலுவலகவருவாய் ஆய்வாளா் சிவக்குமாா், பொறியியல் பிரிவு கண்காணிப்பாளா் ராஜகோபால் ஆகியோா் தலைமையில் 6 குழுவினா் கனி ஜவுளி சந்தைக்கு திங்கள்கிழமை காலை சென்று வாடகை செலுத்தாத 25 ஜவுளி கடைகளுக்கு 'சீல்' வைத்தனா்.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: கனி மாா்க்கெட் வணிக வளாகத்தில் வைப்புத் தொகை முடிந்தும் கடந்த 6 மாதங்கள் முதல் 8 மாதங்கள் வரை 190 கடைகளைச் சோ்ந்தவா்கள் ரூ.1 கோடியே 75 லட்சம் வரை வாடகை நிலுவை வைத்துள்ளனா். இதில், ரூ.1 லட்சத்துக்கும் மேல் நிலுவை வைத்துள்ள 25 கடைகளுக்கு முதற்கட்டமாக 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.



இதேபோல, மணிக்கூண்டு அருகேயுள்ள நேதாஜி வணிக வளாகத்தில் 6 கடைகளை நடத்தி வருபவா்கள் ரூ.7 லட்சம் நிலுவை வைத்திருந்ததால் அந்த கடைகளும் 'சீல்' வைக்கப்பட்டன. திங்கள்கிழமை ஒரேநாளில் மட்டும் 31 கடைகளுக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. வாடகை செலுத்தாத கடைகள் மீது தொடா்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றனா்.

இதனிடையே எந்தவித முன் அறிவிப்புமின்றி அதிகாரிகள் கடைகளை பூட்டி 'சீல்' வைத்துள்ளனா் என வியாபாரிகள் குற்றஞ்சாட்டினா்.

## உலக தாய்மொழி தினம் முப்பெரும் விழா 2025

சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மாணவர்கள் கட்டுரைகள் வெளியீடு சேலம், ஏ. வி. எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேலம் மகிழம் தமிழ்ச் சங்கம், டுடே பன்னாட்டு தமிழ் ஆய்விதழ் மற்றும் சேலம், ஏ வி எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய முப்பெரும் விழா 2025 இல் "தமிழும் வாழ்வியலும்" என்ற பொருண்மையில் எமது கல்லூரி மாணவர்கள் ரா.இளம்பரிதி, இ.அன்பரசு, ம.வெற்றிமதி, க.கார்த்திகா, மா.சுஹாசினி, மு.நிவேதா, ச. சாதனா, வி.தர்ஷினி, சே.ஷர்மதா, கு.செ.மாதேஷ் மிகச்சிறந்த முறையில் எழுதிய கட்டுரைகள் பன்னாட்டு தமிழ் ஆய்விதழாக விமர்சியாக வெளியிடப்பட்டது. கட்டுரைகள் வெளியிட்ட மாணவ மாணவிகளுக்கு கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் வாழ்த்துகள் தெரிவித்தார்.



## குருவிகுளத்தில் அ. தி. மு. க. சார்பில் பூத் கமிட்டி ஆலோசனைக்கூட்டம்

குருவிகுளம் வடக்கு ஒன்றிய அதிமுக சார்பில் பூத் கமிட்டி ஆலோசனைக்கூட்டம் குருவிகுளம் சமுதாய மண்டபத்தில் வைத்து நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் ,சங்கரன்கோவில் நகர் மன்ற துணை சேர்மன் கண்ணண் (எ) ராஜூ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அதற்கு முன்னதாக முன்னாள் தமிழக முதல்வர்கள் எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஆகியோர் திரு உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் குருவிகுளம் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் முத்துபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் காளிராஜ், குருவிகுளம் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் கிருஷ்ணசாமி, குருவிகுளம் தென்பகுதி அதிமுக செயலாளர் குழந்தைசாமி, கிளை செயலாளர் மோகன்சாமி, மாவட்ட விவசாய அணி துணை தலைவர், கள்ளிக்குளம் கிளைசெயலாளர்வசந்தகுமார்,தூர்கா நகர் கிளை கழக ராஜ்குமார், புதூர் கிளை செயலாளர் கோமதி சங்கர், மலைப்பட்டி கிளை செயலாளர் அய்யாத்துரை, மீனாட்சிபுரம் கிளை செயலாளர் வேல்முருகன், கணபதிபட்டி கிளை செயலாளர் தினவேல், கள்ளிக்குளம் காலனி கிளை செயலாளர் ராஜ், வாகைக்குளம் கிளை செயலாளர் பால்பாண்டியண், நாலுவாசன்கோட்டை கிளை செயலாளர் சாந்தகுமார், அழகுநேரி கணகம்மாள், அழகாபுரி தெற்கு கிளை செயலாளர் விஜயசேகர், அழகாபுரிவடக்கு கிளை செயலாளர் உடையார், அழகுநேரி கிளை செயலாளர் கலைநீதிராஜ், பெருங்கோட்டூர் மனோஜ்பாண்டியன், முகேஷ் குமார், அத்திபட்டி கிளை செயலாளர் ராமராஜ், செவல்குளம் கிளை செயலாளர்கள் முத்துபாண்டியன், கருப்பசாமி, குருநாதன், சத்திரகொண்டன் கிளை செயலாளர் ஆரோக்கியதாஸ், உடப்பாங்குளம் கிளை செயலாளர் கருப்பசாமி, ஒன்றிய மகளிர் அணி செயலாளர் பவானி, ஒன்றிய இணை செயலாளர் பாலம்மாள் ,ஆவுடையம்மாள் மற்றும் நவநீதன் கிருஷ்ணன், ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## ஆலங்குளம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட காவல் நிலையங்களில் பணிபுரியும் பெண் காவலர்களின் மகளிர் தின விழா

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் உட் கோட்டத்திற்கு உட்பட்ட காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் காவலர்கள் இணைந்து மகளிர் தினத்தை முன்னிட்டு ஆலங்குளம் ஏஜே மஹாலில் மகளிர் தின விழாமிக விமர்சியாக கொண்டாடப் பெற்றது. இவ் விழாவிற்கு கடையம் காவல் ஆய்வாளர் மேரி ஜெமிதா தலைமை தாங்கினார் சுரண்டை காவல் நிலைய ஆய்வாளர் செந்தில், ஆலங்குளம் காவல் ஆய்வாளர் காசி பாண்டியன், ஊத்துமலை காவல் ஆய்வாளர் வனசுந்தர், தூத்துக்குடி காவல் ஆய்வாளர் லட்சுமி பிரபா, ஊத்துமலை உதவி காவல் ஆய்வாளர் பேச்சியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாவூர்சத்திரம் சிறப்பு காவல் ஆய்வாளர் செந்தில் ராணி வரவேற்று பேசினார். ஆலங்குளம் துணை காவல் கண்காணிப்பாளர் கி ளாட்ஸ்ன் ஜோஸ், அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சுமதி, ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்தனர். ஆலங்குளம் ஒன்றிய சேர்மன் எம் திவ்யா மணிகண்டன், ஆலங்குளம் பேரூராட்சி சேர்மன் சுதா மோகன்லால் ஆகியோர் கலந்து கொண்டு பெண் காவலர்களை வாழ்த்தி பேசினார்கள் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் ஆலங்குளம் காவல் நிலையம், மகளிர் காவல் நிலையம், பாவூர்சத்திரம் காவல் நிலையம், சுரண்டை காவல் நிலையம், ஊத்துமலை காவல் நிலையம், வீகே புதூர் ஆகிய காவல் நிலையங்களில் பணிபுரியும் ஆய்வாளர்கள் , உதவி ஆய்வாளர்கள் சிறப்பு காவல் ஆய்வாளர்கள், காவலர்கள், காவல் ஆளிநர்கள் உள்பட பலர்கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழாவில் பெண் காவலர்களின் குழந்தைகள் நடன நிகழ்ச்சிகள், மற்றும் பாவூர்சத்திரம் செல்வாவின் பிரைட் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.



## புதர்மண்டி கிடக்கும் தும்பவனம் கால்வாய்: தூர்வாரி சீரமைக்க கோரிக்கை



காஞ்சிபுரம், மார்ச்.19

காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகம் அருகில் புதர் மண்டிக் கிடக்கும் தும்பவனம் கால்வாயை தூர்வாரி சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். காஞ்சிபுரம் அடுத்த திருப்பருத்திகுன்றம் பகுதியில் இருந்து தும்பவனம் கால்வாய் தொடங்குகிறது.

ராகவேந்திரா நகர், போஸ்டல் காலனி, அரசு ஊழியர்கள் குடியிருப்பு வழியாக வந்தவாசி சாலையின் குறுக்கே அமைக்கப்பட்ட சிறு பாலத்தின் வழியாக வேகவதி ஆற்றில் மழைநீர் கலக்கும் வகையில், இந்த கால்வாய் அமைந்துள்ளது.

திருப்பருத்திக்குன்றம் கலெக்டர்அலுவலகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்யும் மழைநீர் வெளியேறும் வகையில், தும்பவனம் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இக்கால்வாயில் முறையான பராமரிப்பு இல்லாததால் செடி, கொடிகள், கோரை புற்கள் அதிகளவில் முளைத்து, புதர்மண்டி தூர்ந்த நிலையில் உள்ளது.

மேலும், அப்பகுதி குடியிருப்புகளின் கழிவுநீரும் இந்த கால்வாயில் விடப்படுவதால், ஆங்காங்கேகழிவுநீர் தேங்கி கடும் துர்நாற்றம் வீசும்அவலநிலையில் காணப்படுகிறது. அதிகளவில் கொசு உற்பத்தியாகி அப்பகுதி மக்கள் தொற்று நோய் பாதிப்புகளால் அவதியடைந்து வருகின்றனர்.

எனவே, கலெக்டர் அலுவலகம்மற்றும்குடியிருப்பு அருகிலேயே அதிகளவில் செடி,கொடிகள்முளைத்து புதர்மண்டி கிடக்கும் தும்பவனம் கால்வாயை தூர்வாரி, கழிவுநீர்தேங்காமல் செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருப்போரூர் தொகுதி பையூர் பகுதியில் போக்குவரத்து பணிமனை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்: சட்டசபையில் எஸ்.எஸ்.பாலாஜி எம்எல்ஏ வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.19

திருப்போரூர் தொகுதி பையூர் பகுதியில் போக்குவரத்து பணிமனை அமைப்பதற்கான திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், என்று சட்டசபையில் எஸ்.எஸ். பாலாஜி எம்எல்ஏ பேசினார். சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது துணை கேள்வி எழுப்பி திருப்போரூர் எம்எல்ஏ எஸ்.எஸ்.பாலாஜி(விசிக) பேசியதாவது: திருப்போரூர் தொகுதி பையூர் பகுதியில் ஏற்கனவே மாநகர போக்குவரத்து பணிமனை அமைப்பதற்கான திட்டம் இருந்ததாக அறிகிறேன். அதை நிறைவேற்றி தருவதற்கு அமைச்சர் முன்வருவாரா?. அந்த பகுதியிலே போக்குவரத்து தொழிலாளர்களுக்கு கூட்டுறவு மூலம் ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தை சமூக விரோதிகள் ஆக்கிரமித்துள்ளனர்.

போக்குவரத்து தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதற்கு பதில் அளித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்பேசுகையில், ''மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் பேருந்து கட்டணம் உயர்வு இல்லாமல் முதல்வர் மு.க.ஸ்டாலின், பழைய பேருந்து கட்டண அளவிலேயே பஸ்களை இயக்குவதற்கு உத்தரவிட்டு, பொதுமக்களுக்கு சிரமம் இல்லாமல் இருப்பதை உறுப்பினர் அறிவார்.

நம்முடைய போக்குவரத்து கழகங்களில் போதிய நிதி இல்லாத காரணத்தால் புதியபணிமனைஅமைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. சிரமமாக இருக்கின்றது. கடந்த ஆண்டு இதே போன்று பணிமனை அமைக்க வேண்டும் என்று ஊரக உள்ளாட்சி துறை அமைச்சர் கோரிக்கை வைத்தார். அவர் சொந்த ஏற்பாட்டில் செய்தால்அதைதருவோம் என்று உத்தரவாரம் அளித்தேன்.

அவரும் அதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். எம்எல்ஏக்கள் உதயசூரியன், தமிழரசி போன்றவர்கள் அவர்களே அமைத்து தருவதாக உத்தரவாதம் அளித்துள்ளார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயே அவற்றை அமைத்து கொடுப்பதற்கு தாங்கள் முன்வந்தால் அவற்றை கூடிய விரைவில் செய்து தருவதற்கு போக்குவரத்து துறை நடவடிக்கை எடுக்கும்'' என்றார்.

## மறைமலைநகர் முதல் காயரம்பேடு வரை குண்டும் குழியுமான சாலை: வாகன ஓட்டிகள் கடும் தவிப்பு



செங்கல்பட்டு, மார்ச்.19

மறைமலைநகர் முதல் காயரம்பேடு வரை குண்டும் குழியுமாக உள்ள சாலையை சீரமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர். செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் உட்புறத்தில் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள் மற்றும் ஏராளமான தனியார் தொழிற்சாலைகள் உள்ளன. மறைமலைநகர் வழியாக காயரம்பேடு வரை செல்லும் இந்த சாலையில் கூடலூர் கலிவந்தபட்டு, கடம்பூர் பகுதி என அனைத்து சாலைகளும் குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

இந்த சாலைகளை கடந்து மறைமலை நகர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வந்து செல்லக்கூடிய வாகன ஓட்டிகள்மற்றும்பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் என அனைவரும் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அவ்வப்போது ஏதோ கடமைக்காக ஜல்லிகற்களை கொட்டி சமன்படுத்தி தற்காலிக சாலைகள் அமைக்கப்படுகின்றன. அந்ததற்காலிகசாலையில் வாகனங்கள் தொடர்ந்து செல்வதால் மீண்டும் பள்ளங்கள் ஏற்பட்டு வருகின்றன.

ஜல்லி கற்கள் டயர்களில் குத்தி பஞ்சராகி வருவதோடு நாளாக நாளாக பள்ளங்கள் பெரிதாகி நிறைய விபத்துகள் ஏற்படும் மரண பள்ளங்களாக மாறி வருகின்றன. எனவே இந்த சாலைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை வைத்துள்ளனர்.

## நெம்மேலி ஊராட்சியில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு: மீட்கக்கோரி கலெக்டரிடம் பொதுமக்கள் மனு



மாமல்லபுரம், மார்ச்.19

மாமல்லபுரம் அருகே, ஆக்கிரமிப்பின் பிடியில் உள்ள மேய்க்கால் அரசு புறம்போக்கு நிலத்தை மீட்கக்கோரி செங்கல்பட்டு மாவட்ட கலெக்டரிடம் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கினர். மாமல்லபுரம் அடுத்த நெம்மேலி ஊராட்சிக்குட்பட்ட பேரூர் ஆதி திராவிடர் பகுதியில் 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதி குடியிருப்பையொட்டி சுமார் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட மேய்க்கால் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது.

கடந்த, 50 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி மக்கள் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்கும் அந்த நிலத்தை பயன்படுத்தி வந்துள்ளனர். இங்கு, ஒன்றிய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் மற்றும் தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலம் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒருபகுதியில் அரசு நர்சரியும் இயங்கி வருகிறது.

இந்நிலையில், மீதமுள்ள, 5 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை அப்பகுதியைச் சேர்ந்த சில அரசியல் கட்சியினர் ஆக்கிரமித்து வைத்துள்ளதாகவும், ஆட்சிக்குக்கும், அரசு அதிகாரிகளுக்கும் அவப்பெயர் ஏற்படும் நோக்கில் செயல்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், நெம்மேலி ஊராட்சி பேரூர் பகுதியைச்சேர்ந்த 50க்கும் மேற்பட்டபொதுமக்கள்நேற்று செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலகல் நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் அருண்ராஜிடம் மனு அளித்தனர். அதில், அரசு நர்சரி அமைந்துள்ள இடத்தை தவிர்த்து ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும் வகையிலும், குழந்தைகள் விளையாடவும் மேய்க்கால் அரசு புறம்போக்கு நிலத்தை மீட்க வேண்டும், என்று மனு அளித்தனர்.

## திருப்போரூரில் சார்பதிவாளர் அலுவலகத்தை அனைத்து கட்சியினர் முற்றுகை

திருப்போரூர், மார்ச்.19

திருப்போரூரில் சார்பதிவாளர் அலுவலகத்தை அனைத்துக் கட்சியினர் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. திருப்போரூர் தெற்கு மாடவீதியில்கடந்த1886ம்ஆண்டு முதல்சார்பதிவகம்செயல்பட்டு வருகிறது. இங்கு, ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள நாவலூர், படூர், கேளம்பாக்கம், தையூர், திருப்போரூர், கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கானத்தூர், முட்டுக்காடு, கோவளம், திருவிடந்தைஉள்ளிட்ட50க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், தங்களின் சொத்து ஆவணங்களை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த, திருப்போரூர்சார்பதிவகத்தை திருப்போரூர், கேளம்பாக்கம், நாவலூர், வண்டலூர் ஆகிய நான்கு அலுவலகங்களாக பிரிக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக அந்தந்த பகுதிகளில் உள்ள சமுதாய கூடங்கள் தேர்வு செய்யப்பட்டு, உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகங்களில் இடம் பெறும் கிராமங்கள் குறித்து பதிவுத்துறை வட்டாரங்களில் வெளியான தகவல்களின் அடிப்படையில், திருப்போரூரைத் தாண்டி உள்ள ஆலத்தூர், கருங்குழிப்பள்ளம், பையனூர், சிறுதாவூர், ஆமூர், அதிகமநல்லூர் ஆகிய கிராமங்கள் திருப்போரூர் சார்பதிவகத்தில் சேர்க்கப்படாமல் கேளம்பாக்கம் சார்பதிவகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, கேளம்பாக்கத்தை ஒட்டி உள்ள படூர், புதுப்பாக்கம், சாத்தங்குப்பம் கிராமங்கள் நாவலூர் சார்பதிவகத்திலும், வெளிச்சை, கொளத்தூர்கிராமங்கள்திருப்போரூர் சார்பதிவகத்திலும் இணைக்கப்பட்டுள்ளன. இதற்கு, எதிர்ப்பு தெரிவித்து அனைத்துக் கட்சிகளின் சார்பில், திருப்போரூர் சார்பதிவகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், திடீரென நேற்று காலை ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்தனர். இதையடுத்து ஆர்ப்பாட்டத்திற்கு வந்திருந்த அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. தண்டரை மனோகரன், ஒன்றிய செயலாளர்கள் குமரவேல், நந்தகுமார், பா.ம.க. முன்னாள் மாவட்ட செயலாளர்கள்என்.எஸ்.ஏகாம்பரம், பி.வி.கே.வாசு, மாவட்ட துணை செயலாளர் தட்சிணாமூர்த்தி, தே.மு.தி.க. ஒன்றிய நிர்வாகி டில்லி பாஸ்கர், மா.கம்யூ ஒன்றிய செயலாளர் செல்வம், இந்திய கம்யூ மாவட்ட துணைத்தலைவர் ஜெகதீசன், அம்பேத்கர் ஜனசக்தி மாநில தலைவர் விஸ்வநாதன், புதியபுரட்சிக்கழகமாநில செயலாளர் லோகு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செய்தி தொடர்பாளர் வேதா அருள், தமிழக வெற்றிக்கழக ஒன்றிய செயலாளர்கவுதம், புரட்சி பாரதம் நிர்வாகிகள் ராஜேஷ், அலெக்சாண்டர் மற்றும் பல்வேறு கட்சியினர் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அப்போது, அனைத்துக் கட்சியினரிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது, அனைத்துக் கட்சியினரும் சார்பதிவாளரை சந்தித்து மனு அளிப்பதாக தெரிவித்தனர். இதற்கு, போலீசார் அனுமதி வழங்கினர். இதைத்தொடர்ந்து, அனைத்துக் கட்சியினரும் சென்று சார்பதிவாளர் ரமேஷிடம் கோரிக்கை மனு அளித்தனர். ஒவ்வொரு சார்பதிவகத்திலும் எந்தெந்த கிராமங்களை சேர்க்க வேண்டும் என்று பொதுமக்களிடம் கருத்து கேட்டு, அரசின் முடிவை செயல்படுத்த வேண்டும் என்றும், பல்வேறு மாவட்டங்களில் உள்ளது போன்ற ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலக வளாகத்தை உருவாக்க வேண்டும் என்றும் அந்த கோரிக்கை மனுவில் கூறப்பட்டிருந்தது.

## நல்லிணக்கத்துடன் சாதி வேறுபாடின்றி, மயானம் பயன்படுத்தும் சிறந்த ஊராட்சிகளுக்கு தலா ரூ.10 லட்சம் காசோலை: காஞ்சி கலெக்டர் வழங்கினார்

காஞ்சிபுரம், மார்ச்.19

நல்லிணக்கத்துடன்சாதி வேறுபாடுகளின்றி மயானம் பயன்படுத்தும் சிறந்த ஊராட்சிகளுக்கு தலா ரூ.10 லட்சத்திற்கான காசோலைகளைமாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் வழங்கினார். காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் தலைமை தாங்கி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

மொத்தம் 631 மனுக்களை பெற்று, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனைத்துத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தின் ஒரு பகுதியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், தீண்டாமை கடைப்பிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன்வாழும் சிறந்த ஊராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வாலாஜாபாத் வட்டம், கட்டவாக்கம் ஊராட்சிக்கு ரூ.10 லட்சத்திற்கான நிதியுதவியை, ஊராட்சி மன்றத்தலைவர் ஏ.அஞ்சலம்,

சாதிவேறுபாடுகளற்ற மயானம் பயன்படுத்தும் சிறந்த ஊராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட குன்றத்தூர் வட்டம், வரதராஜபுரம் ஊராட்சிக்கு ரூ.10 லட்சத்திற்கான நிதியுதவியை ஊராட்சி மன்றத்தலைவர் செல்வமணி, நாட்டரசன்பட்டு ஊராட்சிக்கு ரூ.10 லட்சத்திற்கான நிதியுதவியை ஊராட்சி மன்றத்தலைவர் வசந்தி சாம்பசிவம் ஆகியோரிடம் வழங்கினார். பின்னர், வன்கொடுமை தீருதவி தொகை ரூ.1.75 லட்சமும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட நபருக்கு இலவசவீட்டுமனை பட்டா ஆகியவற்றையும் வழங்கினார்.

மேலும்,ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் கிளாய் ஆதிதிராவிட நலத்துறை நடுநிலைப்பள்ளியில் சத்துணவு சமையலராக பணி புரிந்து, பணி காலத்தில் காலமான க.எல்லம்மாள் என்பவரின் வாரிசுதாரரான ஈஸ்வரி என்பவருக்கு சத்துணவு அமைப்பாளர் பணி நியமன ஆணையை வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதிIV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமன ஆணைகளையும் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழா முன்னிட்டு, மாநில அளவிலான மகளிர் கபாடி போட்டியில் முதல் பரிசு பெற்ற காஞ்சிபுரம் மகளிர் சிறப்பு விளையாட்டு விடுதி மாணவிகளுக்கு மாவட்ட பரிசு கோப்பையை வழங்கி பாராட்டினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தனலட்சுமி, அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

★ பட்டா வழங்கக்கோரி மனு

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், முத்தியால்பேட்டை கிராமம் எம்ஜிஆர் நகர் பகுதியில் வசிக்கும் 100க்கும் மேற்பட்ட கிராம மக்கள், தாங்கள்சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அரசு மூலம் பெற்று வசித்து வருவதாகவும், எந்தவித ஆட்சேபனை இல்லாத இடத்தில் தலைமுறை தலைமுறையாக வசித்து வரும் தங்களுக்கு தற்போது குடியிருக்கும் வீட்டிற்கு பட்டா வழங்கிட வேண்டும் எனக்கோரி மனு அளித்தனர். மனுவை பெற்றுக்கொண்ட மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

## முதல்வர் பிறந்தநாள் கிரிக்கெட் போட்டி வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பை



ஸ்ரீபெரும்புதூர், மார்ச்.19

ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் பொதுகூட்டத்தில், கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுக் கோப்பை மற்றும் நினைவு பரிசுகளை தலைமை கழக பேச்சாளர்கள் ஒப்பில்லாமணி, சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வழங்கினர். ஸ்ரீபெரும்புதூர் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் ஸ்ரீபெரும்புதூர் நகர திமுக சார்பில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம் ஸ்ரீபெரும்புதூர் பேருந்து நிலையம்அருகில்நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஸ்ரீபெரும்புதூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மேவளூர்குப்பம் கோபால்தலைமைவகித்தார். ஸ்ரீபெரும்புதூர் நகராட்சி செயலாளர் சதீஷ்குமார் வரவேற்றார். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய குழு தலைவர் கருணாநிதி, நகராட்சி தலைவர் சாந்தி சதீஷ்குமார், மாவட்ட கவுன்சிலர் பாலா, ஸ்ரீபெரும்புதூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மனோஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், தலைமை கழக பேச்சாளர்கள் ஒப்பில்லாமணி, சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

பின்னர், முதல்வரின் பிறந்தநாளையொட்டி ஸ்ரீபெரும்புதூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை, நினைவு பரிசுகள் மற்றும் ஊக்கத்தொகை ஆகியவற்றை வழங்கினர். இக்கூட்டத்தில், மாநில பொதுக்குழு உறுப்பினர் கணேஷ்பாபு, ஒன்றிய கவுன்சிலர்கள் பரமசிவம், கோமதி கணேஷ்பாபு, ஒன்றிய குழு துணைத்தலைவர் மாலதி போஸ்கோ, சாதிக்பாஷா, மாவட்ட நிர்வாகிகள் முருகன், ஜார்ஜ், சந்தவேலூர் சத்யா, அரிகிருஷ்ணன், முனிகிருஷ்ணன், போஸ்கோ, மண்ணூர் சரவணன், ஓவியா முருகன், நகராட்சி நிர்வாகிகள் குமார், ஆறுமுகம், இளைஞர் அணி நிர்வாகிகள் கார்த்திகேயன், சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்பு கடைகளால் சிக்கி திணறும் பயணிகள்: உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்

காஞ்சிபுரம், மார்ச்.18

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் நுழைவாயில் பகுதிகளில் கடைகள் மற்றும் சாலையோர கடைகள் ஆக்கிரமிப்பால், பயணிகள் பேருந்து நிலையத்தி ற்குள் சென்றுவர மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளதால், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முக்தி தரும் தலங்கள் ஏழில் முதன்மையாக கருதப்படுவது காஞ்சி மாநகரம். கோயில்களின் நகரம், பட்டு நகரம் என்று பல்வேறு சிறப்புகளைப் பெற்ற காஞ்சிபுரத்திற்கு தினந்தோறும் ஏராளமானோர் வந்து செல்கி ன்றனர்.

சுற்று வட்டாரப் பகுதிகளான தாமல், பாலுசெட்டிசத்திரம், பரந்தூர், வேடல், ராஜகுளம், வாலாஜாபாத், தூசி, மாமண்டூர், வெம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கல்வி, வேலை, வியாபாரம், மருத்துவம் என பல்வேறு தேவைகளுக்காக காஞ்சிபுரம் வந்து செல்கின்றனர். அதுமட்டுமின்றி வெளியூர், வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

பொதுமக்கள் வசதிக்கென காஞ்சிபுரத்தில் இருந்து சென்னை, மதுரை, திருச்சி, புதுச்சேரி, தஞ்சாவூர், திருவண்ணாமலை, சேலம், வேலூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் மற்றும் ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட அண்டை மாநிலங்களுக்கும் காஞ்சிபுரத்தில் இருந்து தினமும் சுமார் 400க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார்பேருந்துகள்இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்து நிலையத்திற்கு உள்ளே சென்றுவர இரு நுழைவாயில் உள்ளது.

இதில், காமராஜர் வீதி நுழைவாயில் பகுதி சாலையின் இருபுறமும், நடைபாதையை ஆக்கிரமித்து பழம், டீ, ஸ்வீட்ஸ், பூக்கடை, உணவகம் என பல்வேறு கடைகள் வைத்துள்ளனர். இந்த, ஆக்கிரமிப்பாளர்கள் நடைபாதை மட்டுமின்றி, சாலையையும் 4 அடிக்கும் மேல் ஆக்கிரமித்து கடைகள் வைத்துள்ளனர். இதனால், சாலையின் அகலம் வெகுவாக குறைந்துவிட்டதால், வாகன போக்குவரத்து மிகுந்த காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளி, அலுவலகம் சென்று வரும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது.

மேலும், நிலையத்தில் இருந்து பேருந்தை வெளியே ஓட்டிச் செல்ல முடியாமல் ஓட்டுநர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால், பயணிகள் மட்டுமின்றி, சாலையை ஆக்கிரமித்து கடை வைத்துள்ள நடைபாதை வியாபாரிகளும் விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது. எனவே, காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து வைத்துள்ள கடைகளை அகற்றவும், மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் இருக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தமிழ்நாட்டு மீனவர்கள் 3 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை

ராமேஸ்வரம், மார்ச்.18: கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேர் மற்றும் அவர்களது படகுகளையும் இலங்கை கடற்படைசிறைபிடித்தது. எல்லைத்தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படை குற்றசாடியுள்ளது.

# மாற்றுத்திறனாளியை தாக்கிய பாஜக நிர்வாகி கைது



திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே அய்யாசாமி காலனி பகுதியில் இறைச்சிக் கடை நடத்தி வரும் மாற்றுத் திறனாளியை தாக்கிய பாஜக உள்ளாட்சி மேம்பாடு பிரிவு நகரச் செயலாளர் செல்வகுமார் (40) கைது செய்யப்பட்டார்.[ இறைச்சிக் கடை இருப்பதால் சாலையில் அப்பகுதியில் செல்லும் போது நாய் துரத்துவதாகக் கூறி தகராறு செய்ததுடன், கல்லை எறிந்து தாக்கியுள்ளார். இது தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரில் 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து செல்வகுமார் கைது செய்யப்பட்டார்.

# தவணை பணத்தை செலவு செய்துவிட்டு வாலிபர் தற்கொலை

திருத்தணி, மார்ச்.19 பொதட்டூர்பேட்டை அருகே ராமசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவரின் மகன் சூர்யா (27). காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு வீட்டைவிட்டு சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை. இந்நிலையில் புச்சிரெட்டிபள்ளி அருகே காப்புக்காடு பகுதியில் உள்ள மரத்தில் வாலிபர் ஒருவர் புடவையில் தூக்கு மாட்டி தற்கொலை செய்துக் கொண்டதை அப்பகுதியில் மாடு மேய்த்தவர்கள் பார்த்துள்ளனர்.

அவர்கள் கொடுத்த தகவலின்பேரில் சூர்யாவின் குடும்பத்தினர் அங்கு சென்று பார்த்தபோது தற்கொலை செய்தது சூர்யா என்பது தெரியவந்தது. திருத்தணி போலீசார், சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டனர். பைக்குக்கு மாத தவணை செலுத்துவதற்காக உறவினர் ஒருவர் சூர்யாவிடம் பணம் கொடுத்துள்ளார்.



அந்த பணத்தை சூர்யா செலவு செய்துவிட்டார். இதனால் உறவினர் கேள்வி கேட்டதால், வேதனையில் சூர்யா தற்கொலை செய்துக்கொண்டதாக விசாரணையில் தெரிய வந்தது. தற்கொலை செய்த சூர்யா 10 ஆண்டுகளுக்கு முன்பு நிரோஷாஎன்றபெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டதும், இவர்களுக்கு இதுவரை குழந்தை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# சிலை கடத்தல் குற்றவாளியை அப்ரூவராக கையாளுவது தவறு: பொன்.மாணிக்கவேல் வழக்கில் ஐகோர்ட் கிளை கருத்து

மதுரை, மார்ச்.19 சிலை கடத்தல் வழக்கின் முக்கிய குற்றவாளியை அப்ரூவராக கையாளுவதே தவறு என ஐகோர்ட் கிளை நீதிபதி கூறியுள்ளார். தமிழக சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஓய்வு பெற்ற ஐஜி பொன்.மாணிக்கவேல் மீது சிபிஐ தொடர்ந்த வழக்கில், அவர் முன்ஜாமீன் பெற்றார். அவர் ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், ''எனக்கு எதிராக சிபிஐ பதிவு செய்த வழக்கை ரத்து செய்ய வேண்டும்'' என்று கூறியிருந்தார். இந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, சிபிஐ வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், சிபிஐ தரப்பில் கூடுதல் விவரங்களை தாக்கல் செய்யவும் ஐகோர்ட் கிளை உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன்நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி, ''சிலை கடத்தல் வழக்கில் முக்கிய குற்றவாளியான தீனதயாளன் என்பவரை அப்ரூவராக கையாளுவதே தவறு என தோன்றுகிறது. அவரது வாக்குமூலத்தை வைத்து, வழக்கின் போக்கை கொண்டு செல்வது சரியானது அல்ல'' என்றார். சிபிஐ தரப்பில், ''பொன்.மாணிக்கவேலால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் குற்றப்பத்திரிகையிலேயே ஓய்வு பெற்ற டிஎஸ்பி காதர்பாட்ஷா சேர்க்கப்பட்டுள்ளார். அது தொடர்பான வழக்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும் இரண்டு உத்தரவுகளை சமர்ப்பிக்க அனுமதி வேண்டும்'' எனக் கூறி வழக்கு தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து நீதிபதி, மனு மீதான விசாரணையை ஏப். 7க்கு தள்ளி வைத்தார்.



# பள்ளிப்பட்டு அருகே குண்டும் குழியுமான சாலை சீரமைக்க கோரிக்கை

பள்ளிப்பட்டு, மார்ச்.19 பள்ளிப்பட்டு அருகே, கர்லம்பாக்கம் கிராமத்தில் ஐயப்பன் கோயில் தெருவில் 100க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இங்குள்ள தெருவில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு சிமெண்ட் சாலை போடப்பட்டது. பின்னர், இது வரை சாலை செப்பனிடப்படாததால், சிமெண்ட் சாலை ஆங்காகே துண்டித்து குண்டும் குழியுமாக மாறி உள்ளது, பொதுமக்கள் பெயர்ந்து குண்டும் குழியுமாக உள்ள சாலையில் தவறி விழுந்து காயமடைந்து வருகின்றனர்.



கிருஷ்ணர் பஜனை கோயில் அருகில் கழிவுநீர் கால்வாய் மேல் தளம் உடைந்து 5 மாதங்களாக திறந்த நிலையில் உள்ளது. இந்நிலையில், இவ்வழியாக இரவு நேரங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் கவனக்குறைவாக சென்றால், உடைந்துள்ள குழியில் சிக்கி பலத்த காயம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தெரு சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அடைப்பு தளத்தை சீரமைக்க வேண்டும் என்று கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# லீவு லெட்டர் கொடுத்தும் இன்ஸ். அம்மா ஆப்செண்ட் போட்டுட்டாங்க... போதை போலீஸ்காரர் வீடியோ வைரல்

திருப்பூர், மார்ச்.19 லீவு லெட்டர் கொடுத்தும் இன்ஸ்பெக்டர் அம்மா ஆப்சென்ட் போட்டுட்டாங்க என போதையில் போலீஸ்காரர் பேசும் வீடியோ திருப்பூரில் வைரலாகி வருகிறது. திருப்பூர் வீரபாண்டி காவல் நிலையத்தில் போலீஸ்காரராக இருப்பவர் முத்துசாமி. இவர், தன் முன்னால் மது பாட்டில்கள் சிகரெட் பெட்டி, தண்ணீர்பாட்டில்கள் வைத்துக்கொண்டு போதையில் மாநகர போலீஸ் கமிஷனருக்கு பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில் அவர் பேசியிருப்பதாவது: நான், நேற்று டூட்டியில் இருக்கும்போது ஒரு 100 கால் அட்டன் செய்து அந்த பிரச்னையை சரி செய்தேன். இப்போது என் மனைவியை காணவில்லை, அதனால் மது அருந்தி கொண்டுள்ளேன். என் மகள் நன்றாக படித்து மெடல் வாங்கியுள்ளார். போலீஸ் ஸ்டேஷனில் போய் சொன்னேன்.



லீவு லெட்டர் கொடுத்தும் இன்ஸ்பெக்டர் அம்மா எதுக்கு ஆப்சென்ட் போட்டாங்கனு எனக்கு தெரியலை ஐயா. நேரா போய் ஜே.எம்.4 பார்க்க போகிறேன். அவர பார்க்கவா; இல்ல எங்க ஏரியா கவுன்சிலர பார்க்கவா; என நீங்களே சொல்லுங்க ஐயா... இவ்வாறு அவர் வீடியோவில் பேசியுள்ளார். மீண்டும் ஒரு வீடியோ வெளியிட்டு எனது மனைவி, மகள்கள் கிடைத்துவிட்டார்கள் எனவும், எனது மனைவியை கோபத்தில் அடித்துவிடுவேன் என்பதற்காக என் அத்தை என் வீட்டில் உள்ளார்கள் எனவும் பேசியதும் சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது. இது, திருப்பூர் காவல் துறை வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# புழல், சோழவரம் பகுதிகளில் திமுக சார்பில் கால்பந்து போட்டிகள்: எம்எல்ஏ பரிசு வழங்கினார்

புழல், மார்ச்.19 சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டுமாநில அளவிலான மாபெரும் 2 நாள் கைப்பந்து போட்டி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் அங்காள பரமேஸ்வரி கோயில் விளையாட்டு திடலில் நடைபெற்றது. இதில் சென்னை, அரியலூர், தஞ்சாவூர், கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கைப்பந்து விளையாட்டு வீரர்கள் விளையாடினார்கள்.

இதில் முதல் இடத்தை பிடித்ததஞ்சாவூர்அணிக்கு ரூ.50 ஆயிரம், 2வது இடத்தைப் பிடித்த செங்கல்பட்டு சோழிங்கநல்லூர் அணியினருக்கு ரூ.40 ஆயிரம், 3வது இடத்தைப் பிடித்த சென்னை அணிக்கு ரூ.30 ஆயிரம், 4வது இடத்தை பிடித்த சென்னை லயோலா கல்லூரி அணிக்கு ரூ.20 ஆயிரம் ரொக்கப் பரிசு மற்றும் நினைவுப் பரிசு வழங்கும் விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. விழாவுக்கு சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கருணாகரன் தலைமை தாங்கினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ முதல் நான்கு இடம் பிடித்த அணியினருக்கு ரொக்க பரிசுகளையும், நினைவு பரிசையும் வழங்கினார். இதேபோல் புழல் ஒன்றிய திமுக சார்பில் செங்குன்றம் அடுத்த வடகரை அரசு ஆதிதிராவிட நலத்துறை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு திடலில் ஒருநாள் எழுவர் கால் பந்தாட்ட போட்டி நடைபெற்றது. இதில் திருவொற்றியூர், மணலி, வடகரை, சீமவரம், மீஞ்சூர் பாடியநல்லூர், பம்மது குளம், வியாசர்பாடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 16 அணிகள் கலந்து கொண்டன. இறுதியில் பாடியநல்லூர் அணி முதலிடத்தையும், பம்மது குளம் அணி 2வது இடத்தையும் பிடித்தன. முதல் இடத்தைப் பிடித்தவர்களுக்கு ரூ.50,000, 2வது இடத்தைப் பிடித்தவர்களுக்கு ரூ.40 ஆயிரம் வழங்கப்பட்டது. பரிசளிப்பு விழாவுக்கு புழல் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் வடகரை அற்புதராஜ் தலைமை தாங்கினார். எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ பரிசுகளை வழங்கினார்.

# ரயிலில் இருந்து விழுந்த கல்லூரி மாணவன் பலி

தாம்பரம், மார்ச்.19 காஞ்சிபுரத்தை அடுத்த ஆர்ப்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் விஷ்வா (20). இவர் மீனம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் பி.ஏ., கிரிமனாலஜி, 3ம் ஆண்டு படித்து வந்தார். தினமும் மின்சார ரயில் மூலம் கல்லூரிக்கு செல்லும் விஷ்வா நேற்று வழக்கம் போல கல்லூரிக்கு செல்வதற்காக திருமால்பூர் – கடற்கரை செல்லும் விரைவு மின்சார ரயிலில் வந்துள்ளார்.

விரைவு மின்சார ரயில் என்பதால் எப்போதும் அதில் கூட்டம் அதிகளவில் இருக்கும்.

அப்படி நேற்று ரயிலில் அதிகளவில் கூட்டம் இருந்ததால் விஷ்வா படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ரயில் தாம்பரம் அருகே வந்த போது ரயிலில் இருந்து விஷ்வா நிலை தடுமாறி கீழே விழுந்து உள்ளார்.

இதில் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவம் குறித்த தகவல் அறிந்த தாம்பரம் ரயில்வே போலீசார் அங்கு சென்று உடலை மீட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதல்வர் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் பங்கேற்பு

திருவள்ளூர், மார்ச்.19 முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருமழிசை பேரூர் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. பேரூர் செயலாளர் தி.வே. முனுசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ப.ச.கமலேஷ், டி.தேசிங்கு, பேரூராட்சி தலைவர் மகாதேவன், பேரூர் நிர்வாகிகள் கருணாநிதி, அமுதா முனுசாமி, நாகதாஸ், குமார், செல்வம், வேந்தன், பார்வதி, அருள், சுரேந்தர், எழிலரசன், இளங்கோவன், சங்கர், சண்முகம், பன்னீர் செல்வம், பார்த்திபன், சதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான சா.மு. நாசர், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ, பேச்சாளர் வே.மதிமாறன் ஆகியோர் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளைவழங்கி முதல்வரின் சாதனை, அரசு திட்டங்கள் குறித்து பேசினர்.



இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜே. ரமேஷ், சி.ஜெரால்டு, காயத்ரி ஸ்ரீதரன், காஞ்சனா சுதாகர், கவுன்சிலர்கள் விஜயலட்சுமி வேலு, கஸ்தூரி அருள், ஜீவா சதீஷ், அனிதா சங்கர் மற்றும் ரேவதி, மோகன்ராஜ், சரண்யா, நாகராஜ், கோபு, ராஜா, பிரதீபன், தாமோதரன், தேவகுமார், அன்பு, நாகராஜ், தரணி பிரசாத், ஆனந்தராஜ், கோபு, முரளி, கோகுல் ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் கங்காதரன், பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறினர்.

# ராமகிருஷ்ணன் சிபிஎஸ்இ பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா

திருவள்ளூர், மார்ச்.19 திருவள்ளூர் அடுத்த பழைய திருப்பாச்சூரில் உள்ள டாக்டர் எஸ்.ராமகிருஷ்ணன் மெமோரியல் சிபிஎஸ்இ பள்ளியில் ஆண்டு விழா மற்றும் தொடக்க நிலை மழலையர் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு பள்ளியின் பொருளாளர் கே.வி.ஜெகதாம்பிகா, நிர்வாக அலுவலர் எல்.எஸ்.குணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



பள்ளி முதல்வர் வி.ராமச்சந்திரன் வரவேற்றார். விழாவில் பள்ளியின் தாளாளர் ஏ.லாலு தலைமை தாங்கி மழலையர் பட்டங்களை வழங்கி வாழ்த்தினார். இதில் ரோட்டரி கிளப் தலைவரும், பள்ளி ஆலோசனை குழு உறுப்பினருமான எச்.ஜெயபிரகாஷ், முன்னாள் தலைவரும், பள்ளி ஆலோசனை குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.திராவிடமணி, டி.டொனால்ட் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தி பேசினர்

# மாமல்லபுரம் நுழைவாயில் சிற்பகலை தூண் சுற்றுச்சுவர் சேதம்: சீரமைக்க சுற்றுலாப்பயணிகள் கோரிக்கை

மாமல்லபுரம், மார்ச்.18 மாமல்லபுரம் இசிஆர் சாலை நுழைவு பகுதியில் அமைந்துள்ள 45 அடி உயர சிற்பக்கலைத் தூண் சுற்று சுவர் மீது, அடையாளம் தெரியாத வாகனம் மோதி சேதமடைந்த நிலையில் அதனை உடனடியாக சீரமைக்க வேண்டும் என சுற்றுலாப்பயணிகள் கோரிக்கைவிடுக்கின்றனர். தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம்(பூம்புகார்) சார்பில் கைவினைஞர்களின் மேம்பாட்டிற்காகவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில், மாமல்லபுரம், இசிஆர் சாலை நுழைவு வாயிலில் ரூ.60 லட்சம் மதிப்பில் 45 அடி உயரத்தில் அழகிய சிற்பக்கலை தூண் கலைநயமிக்க பல்லவர் கால சிம்மம், யாழி, தோகை விரித்தாடும் மயில்கள், யானைக்கூட்டம் ஆகியவைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டு, மாமல்லபுரத்திற்கு வருகைதரும் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்பட்டது.




மேலும், கடந்த 2022ம் ஆண்டு 186 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடிய சர்வதேச 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி மாமல்லபுரம் அடுத்த பூஞ்சேரி இசிஆர் சாலையையொட்டி உள்ள ஒரு தனியார் ரிசார்ட்டில் நடந்தது. முன்னதாக, வீரர் வீராங்கனைகளை வரவேற்கும் வகையில், கடந்த 2022ம் ஆண்டு ஜூலை 27ம் தேதி தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்த சிற்பக்கலை தூணை தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) பராமரித்து வந்தது. தற்போது, அந்த சிற்பக்கலைத் தூணை பூம்புகார் நிறுவனம் பராமரிக்காமல் விட்டு விட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், சிற்பக்கலைத் தூணின் பாதுகாப்புக்காக கட்டப்பட்ட 3 அடி உயர சுற்றுசுவரின் ஒரு பகுதி அடையாளம் தெரியாத வாகனம் மோதி சேதமடைந்துள்ளது.

இதனிடையே சேதமடைந்த சிற்பக்கலைத் தூணின் சுற்றுச்சுவரை சீரமைக்க வேண்டும், என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தும் பூம்புகார் நிறுவனம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. சிற்பக்கலை நகரமான மாமல்லபுரம் இசிஆர் சாலையின் நுழைவாயில் அமைந்துள்ள சிற்பக்கலைத் தூணின் சுற்றுச்சுவர சீரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று சுற்றுலாப்பயணிகள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

# காரைக்கால் அம்மையார் அருளாளர் விழா

திருத்தணி, மார்ச்.19 திருத்தணி முருகன் கோயிலின் உபகோயிலான பிரசித்தி பெற்ற மிகப் பழமையான திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோயில், சிவபெருமானின் ஐம்பெரும் சபைகளில் முதல் சபையான ரத்தின சபை என்ற சிறப்பு பெற்ற சிவத்தலமாகும். இக்கோயிலில் காரைக்கால் அம்மையாரின் அருளாளர் விழாவை மிகச் சிறப்பாக கொண்டாட ஏற்கனவே தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோயிலில் நேற்று முன்தினம் காரைக்கால் அம்மையாரின் அருளாளர் விழா மிக விமரிசையாக நடந்தது.

காரைக்கால் அம்மையாருக்கு அபிஷேக, ஆராதனை பூஜைகள் நடந்தது.

பின்னர், சிறப்பு மலர் அலங்காரத்தில் புஷ்பநாக ஊஞ்சல் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று, காரைக்கால் அம்மையாரை தரிசித்து வழிபட்டனர். இதைத்தொடர்ந்து, இவ்விழாவின் 2ம்நாளான நேற்று இரவு அம்மன் திருவீதியுலாவும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை முருகன் கோயில் இணை ஆணையர் ரமணி மேற்பார்வையில்கோயில் நிர்வாக ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

19.3.2025

# ஆவின் நிறுவனத்திற்கு பால் விநியோகிக்கும் விவசாயிகளுக்கு காலத்தே ஊக்கத்தொகை ஜி.கே. வாசன் வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.19

த.மா.கா தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தமிழக அரசு, பால் உற்பத்தியாளர்கள், விவசாயிகள் நலன் காக்கும் வகையில் செயல்பட வேண்டும். ஆவின் நிறுவனத்தை லாபத்தில் இயக்க வேண்டும், ஆவினுக்கு பால் விநியோகிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டால் தான் தமிழக மக்கள் பயன் பெறுவார்கள்.

தமிழ்நாட்டில் 20 லட்சம் பேர் ஆவின் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்ற வேளையில் சுமார் 8 லட்சம் விவசாயிகள் ஆவின் நிறுவனத்திற்கு பால் விநியோகிக்கிறார்கள். இந்நிலையில் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அதாவது தினமும் 2 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 35 லட்சம் லிட்டர் பாலை ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்கிறது. ஆவின் நிறுவனம் சிறுகுறுவிவசாயிகளுக்கு பேருதவியாக செயல்பட வேண்டும். அந்த வகையில் ஆவின் நிறுவனம் பால் விநியோகிக்கும் விவசாயிகளின்நலனைக் காக்கும் வகையில் அறிவிக்கப்பட்டலிட்டருக்கு ரூ. 3 என்ற ஊக்கத்தொகையை காலத்தே வழங்க வேண்டும்.

அப்படி வழங்காமல் ஊக்கத்தொகையை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என தாமதமாக வழங்குவதால் பால் விநியோகிக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு பால் கூட்டுறவு சங்கங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இச்சூழலில் விவசாயிகள் அவர்களுக்கான தினசரி ஊக்கத்தொகை வரவு குறித்து பால் கூட்டுறவு சங்கத்தில் முறையிட்டால் வீண் பிரச்னை எழுகிறது. இதற்கு காரணம் கடந்த 4 மாதங்களாக லிட்டருக்கு மூன்று ரூபாய் என்ற ஊக்கத்தொகையை இன்னும் வழங்காமல் இருப்பதே.

தமிழ்நாடு அரசு, பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையை நான்கு மாதமாக வழங்காமல் நிறுத்தி வைத்திருப்பதால் சாதாரண விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இதே போல 4 மாதமாக ஊக்கத்தொகையை காலத்தே வழங்காமல் அலைய வைத்த பின்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இப்போது ஆவின் நிறுவனத்திற்கு பால் விநியோகிக்கும், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கான ஊக்கத்தொகையை உடனடியாக கொடுக்காத பட்சத்தில் காலவரையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

எனவே தமிழக அரசு, ஆவின் நிறுவன வளர்ச்சியை கவனத்தில் கொண்டு பால் விநியோகிக்கும், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவையில் உள்ள 120 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட ஊக்கத்தொகையை உடனடியாக வழங்கி, சுமார் 8 லட்சம் விவசாயிகளின் நலனைக் காக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெகவில் இருந்து ஆதவ் அர்ஜுனா இடைநீக்கம்? வெளியான தகவல்



சென்னை மார்ச்.19

விஜய்யின் தமிழக வெற்றிக்கழகத்தின் தேர்தல் பிரிவு பொதுச்செயலாளராக செயல்பட்டு வருபவர் ஆதவ் அர்ஜுனா.

விடுதலைசிறுத்தைகள் கட்சியில் இருந்து விலகிய ஆதவ் அர்ஜுனா கடந்த ஜனவரி மாதம் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

இதனிடையே, தவெகவில் இருந்து ஆதவ் அர்ஜுனா இடைநீக்கம் செய்யப்பட்டதாக இன்று சமூகவலைதளத்தில் தகவல்கள் பரவின. இதனால், தவெக வட்டாரத்தில் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

இந்நிலையில், ஆதவ் அர்ஜுனா கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதாக வெளியான தகவலுக்கு தவெக மறுப்பு தெரிவித்துள்ளது. கட்சியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டதாக பரவிய தகவல் வதந்தி என்றும், சமூகவலைதளத்தில் போலி செய்தி பரவி வருவதாகவும் தவெக கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை: இபைக் தீப்பிடித்து விபத்து குழந்தை உயிரிழப்பு

சென்னை, மார்ச்.19

சென்னை மதுரவாயல் அன்னை இந்திரா காந்தி நகர் பகுதியை சேர்ந்தவர் கவுதம். இவர் அப்பகுதியில் மனைவி மற்றும் 9 மாத கைக்குழந்தையுடன் வசித்து வந்தார்.

இந்த நிலையில் தனது வீட்டில் நேற்று அவரது இ பைக்கிற்கு சார்ஜ் போட்டிருந்தார். அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக பைக் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த சம்பவத்தில் தம்பதி, குழந்தை உள்பட 3 பேருக்கும் தீக்காயம் ஏற்பட்டது. இதனையடுத்து 3 பேரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 9 மாத கைக்குழந்தையின் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தது. மேலும் குழந்தையின் தந்தை கவுதம் கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# கொட்டும் பனியில் காமன் பண்டிகை கோலாகலம்: திரளான பக்தர்கள் பங்கேற்பு

நீலகிரி, மார்ச்19

தமிழர்களின் சிறப்பு வாய்ந்த பண்டிகைகளுள் ஒன்றாக காமன் பண்டிகை இருந்து வருகிறது. சிலப்பதிகாரம், கலித்தொகை உள்பட பழந்தமிழ் நூல்களில் பெருவிழாவாகவே கொண்டாடப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. மன்மதனை சிவன் எரித்த கதை இன்றும் தமிழகத்தின் பெரும்பாலான கிராமங்களில் காமன் பண்டிகையாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் தாயகம் திரும்பிய தமிழர்கள் தலைமுறைகள் பல கடந்தாலும் தங்களது கலாச்சாரம், பாரம்பரிய பண்டிகைகளை இன்று வரை கொண்டாடி வருகின்றனர்.

கூடலூரில் இருந்து கோழிக்கோடு செல்லும் சாலையில் உள்ள ஆமைக்குளம் பகுதியில் காமன் பண்டிகை நேற்று இரவு 8 மணிக்கு தொடங்கி நேற்று அதிகாலை 6 மணி வரை விடிய விடிய நடைபெற்றது. இதற்காக கடந்த 1ம் தேதி முதல் விரதம் இருந்த பக்தர்கள் ரதி, மன்மதன், சிவன், எமன் உள்ளிட்ட வேடமிட்டு வரலாற்றை நினைவு கூறும் வகையில் காமன் கூத்து நடத்தினர். இதில் ஏராளமான மக்கள் கொட்டும் பனியில் அமர்ந்தவாறு புராண வரலாற்றை நிகழ்வுகளை கண்டு ரசித்தனர். முன்னதாக சிவன் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இறுதியாக மன்மதனை சிவபெருமான் தீயால் எரிப்பது போன்று சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. இதில் உப்புகளை தூவி கிராம மக்கள் வழிபட்டனர். இதற்கான ஏற்பாடுகளை காமன் கூத்துபண்டிகைகுழுவினர், பக்தர்கள், கிராம மக்கள் செய்திருந்தனர்.

இது குறித்து கிராம மக்கள் கூறியதாவது: பார்வதி தேவியின் தந்தை தச்சன் யாகம் நடத்தினார். அதில் பங்கேற்கவருமாறுசிவனை தச்சன் அழைக்க வில்லை. தனது தந்தையின் யாகத்தில் கலந்து கொள்வதற்காக பார்வதி சென்றார். தன்னை தச்சன் அவமதித்து விட்டதாக கோபம் அடைந்த சிவன் கடும் தவத்தில் ஆழ்ந்தார். மேலும் அழைக்காமலேயே சிவன் யாகத்தில் கலந்து கொள்ள வேண்டும் என எண்ணினார்.

இதற்காக தட்சனின் பணியாளர்கள் மன்மதனை அணுகி சிவனின் தவத்தை கலைக்க உத்தரவிட்டனர். திருமண கோலத்தில் இருந்த மன்மதன், ரதியை திருமணம் செய்துவிட்டு தயாரானார். இதனால் ஏற்படும் விபரீதத்தை உணர்ந்த ரதி தனது கனவில் எமன் உள்ளிட்ட பூத கணங்கள் வருவதாக கூறி மன்மதனை செல்ல விடாமல் தடுத்தார். அதை பொருட்படுத்தாமல் கரும்பு வில் மூலம் சிவனின் தவத்தை மன்மதன் கலைத்தார்.

இதனால் கடும் கோபமடைந்த சிவன் வீரபத்திரராக மாறி நெற்றிக்கண் தீயால் மன்மதனை எரித்தார். இதை அறிந்த ரதி, சிவனின் காலில் விழுந்து கணவரை மீட்டு தர வேண்டும் என கண்ணீர் விட்டு கதறினாள். இதனால் இரக்கம் கொண்ட அவர், மன்மதனை உயிர்த்தெழ செய்தார். இந்த புராண வரலாற்றை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் விரதம் இருந்து பக்தர்கள் வேடமிட்டு தத்ரூபமாக கூத்து நடத்தி வருகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# தாம்பரம் அருகே மின்சார ரெயிலில் இருந்து தவறி விழுந்து கல்லூரி மாணவர் உயிரிழப்பு



சென்னை மார்ச்.19

காஞ்சிபுரம் அடுத்த ஆற்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் விஷ்வா(வயது 20). இவர் மீனம்பாக்கத்தில் உள்ள தனியார் கல்லூரியில் பி.ஏ. 3ம் ஆண்டு படித்து வந்தார். தினமும் திருமால்பூரில் இருந்து சென்னை கடற்கரை வரை செல்லும் மின்சார ரெயிலில்பயணம்செய்து கல்லூரிக்கு சென்று வந்தார்.

இன்று வழக்கம்போல் விஷ்வா மின்சார ரெயிலில் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தபோது, தாம்பரம் அருகே கூட்ட நெரிசல் காரணமாக எதிர்பாராத விதமாக ரெயிலில் இருந்து தவறி விழுந்துள்ளார். இதில் தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே மாணவர் விஷ்வா உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்து தாம்பரம் ரெயில்வே போலீசார் விரைந்து சென்று, உயிரிழந்த விஷ்வாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரஜினியின் கூலி திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவு



நடிகர் ரஜினிகாந்தின் 171வது திரைப்படமான 'கூலி' பான் இந்தியா படமாக உருவாகி வருகிறது. இந்த படத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்குகிறார். இந்த படத்தில் சவுபின் ஷாயிர், நாகார்ஜுனா, சத்யராஜ், உபேந்திரா, சுருதிஹாசன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். அதுமட்டுமில்லாமல் பூஜா ஹெக்டே இந்த படத்தில் குத்து பாடல் ஒன்றுக்கு நடனமாடியுள்ளார். சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் ஐதராபாத் மற்றும் பாங்காக் ஆகிய பகுதிகளில் நடைபெற்று முடிவடைந்துள்ளது. மீதமிருக்கும்படப்பிடிப்புபணிகள்சென்னையில்நடைபெற்றது. விறுவிறுப்பாகநடைபெற்றுவரும்படப்பிடிப்புமுடிவடைந்த்து.

இந்த நிலையில் தற்போது இப்படத்தின் ஒட்டுமொத்த படப்பிடிப்பு பணிகளும் நிறைவடைந்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும் படத்தின் மேக்கிங் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

படமானது ஆகஸ்ட் மாதம் 10ந் தேதி அல்லது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியாகும் என தகவல்கள் பரவி வருகின்றன.

# 6வது எபிசோட் : காமிக்ஸ் வடிவில் வெளியான ரெட்ரோ படத்தின் படப்பிடிப்பு காட்சி




நடிகர் சூர்யாவின் 44வது படமான 'ரெட்ரோ' படத்தை இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ளார். சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பெஞ்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்ற இப்படத்திற்கு இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார்.

பூஜாஹெக்டே கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தில் ஜெயராம், கருணாகரன், ஜோஜு ஜார்ஜ், மற்றும் சுஜித் ஷங்கர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் வருகிற மே 1ந் தேதி தொழிலாளர் தினத்தில் வெளியாக உள்ளது. முன்னதாக டீசர், முதல் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

ஏற்கனவே இப்படத்தின் படப்பிடிப்பு காட்சி காமிக்ஸ் வடிவில் வெளியாகி இருந்தது. மேலும், வாரத்திற்கு ஒன்று என்ற கணக்கில் படப்பிடிப்பு காட்சிகளை வெளியிடவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி, 6வது வார படப்பிடிப்பு காட்சிகள் காமிக்ஸ் வடிவில் வெளியாகி உள்ளது. இது ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வைரலாகி வருகிறது.

# ஸ்ரீலீலா நடித்துள்ள 'ராபின்ஹுட்' படத்தின் டிரெய்லர் அப்டேட்



ஸ்ரீலீலா கதாநாயகியாக நடித்துள்ள படம் ராபின்ஹுட். நிதின் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தை வெங்கி குடுமுலா எழுதி இயக்கி இருக்கிறார். ராஜேந்திர பிரசாத், ஷைன் டாம் சாக்கோ, வெண்ணேலா கிஷோர், மைம் கோபி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். மேலும் இப்படத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வார்னர் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார். இப்படம் வரும் 28ம் தேதி வெளியாக உள்ளது.

ஜிவி பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்தின் 'ஒன் மோர் டைம்' மற்றும் 'வாட்டெவர் யூ கோ' என்ற பாடல்கள் சமீபத்தில் வெளியானது. அதனைத்தொடர்ந்து, இப்படத்தின் 3வது பாடலான'அதிதாசர்ப்ரைஸ்'பாடல்வெளியாகி இணையத்தில் வைரலானது. இந்த சிறப்பு பாடலுக்கு பிரபல நடிகை கெட்டிகா ஷர்மா நடனமாடியுள்ளார்.

இந்த நிலையில், மைத்ரீ மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தின் டிரெய்லர் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, டிரெய்லர் வருகிற 21ந் தேதி மாலை 04.05 மணிக்கு வெளியாக உள்ளது.

# சாம்பியன்ஸ் டிராபி தொடரை நடத்தியதால் பாக்.கிரிக்கெட் வாரியத்திற்கு இத்தனை கோடி நஷ்டம்..?




அண்மையில் முடிவடைந்த 9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. பாதுகாப்பு பிரச்சினை காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் துபாயில் நடைபெற்றது. இதில் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்தியாதோல்வியேசந்திக்காமல்கோப்பையைகைப்பற்றியது.

இந்த தொடரில்நடப்புசாம்பியனாககளமிறங்கிய பாகிஸ்தான் அணி ஒரு வெற்றி கூட பெறாமல் தனது பிரிவில் (ஏ பிரிவு) கடைசி இடம் பிடித்து பரிதாபமாக வெளியேறியது. இதனால் அந்த அணியை அந்நாட்டின் பல முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர்.

இந்நிலையில் சாம்பியன்ஸ் டிராபியை நடத்தியதால் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இந்த தொடரை வெற்றிகரமாக நடத்துவதற்காக பாகிஸ்தான் வாரியம் தங்களது நாட்டில் உள்ள லாகூர், கராச்சி, ராவல்பிண்டி ஆகிய 3 முக்கிய மைதானங்களை புதிதாக கட்டமைத்தது. அதற்காக அந்நாட்டு வாரியம் ரூ. 800 கோடிகளுக்கு மேல் செலவு செய்துள்ளது.

ஆனால் உள்ளூரில் பாகிஸ்தான் அணி ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டுமே விளையாடியது. இதனால் டிக்கெட் விற்பனை மற்றும் ஸ்பான்சர்ஷிப் ஆகியவை குறைந்து போயின. இதன் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துக்கு சொற்ப வருமானமே கிடைத்தது. மேலும் தொடரை நடத்தியதற்காக ஐ.சி.சி. யும் குறைவான தொகையே அளித்துள்ளது.

இதனால் சாம்பியன்ஸ் டிராபி தொடரை நடத்தியதால் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு சுமார் ரூ.869 கோடி வரை இழப்பு ஏற்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இதனை ஈடுகட்ட வரும் காலங்களில் வீரர்களுக்கான சலுகைகள் மற்றும் போட்டி கட்டணத்தை குறைக்க பாகிஸ்தான் வாரியம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# நியூசிலாந்து பாகிஸ்தான் 2வது டி20: மழை காரணமாக டாஸ் போடுவதில் தாமதம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் டி20 போட்டியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து 10 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2வது டி20 போட்டி டுனெடினில் இன்று நடைபெறுகிறது.இந்நிலையில்தற்சமயம்அங்குமழைபெய்வதன்காரணமாகடாஸ்போடுவதில்தாமதம்ஏற்பட்டுள்ளது. மழை நின்றவுடன் ஆட்டம் தொடங்கும் என்று கூறப்பட்டுள்ளது.

# சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்: சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு பரிசுத்தொகை எவ்வளவு..?

முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றது. 6 அணிகள் கலந்து கொண்ட இந்த தொடரில் வெஸ்ட் இண்டீசை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

இதன்இறுதிப்போட்டியில்டாஸ்வென்றுமுதலில்பேட்டிங்செய்தவெஸ்ட்இண்டீஸ்20ஓவர்களில்7விக்கெட்டுகளை இழந்து 148 ரன்கள் அடித்தது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக லெண்டில் சிம்மன்ஸ் 57 ரன் எடுத்தார். இந்தியா தரப்பில் வினய் குமார் 3 விக்கெட்டுகளும், ஷபாஸ் நதீம் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 149 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 17.1 ஓவரில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து 149 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் சாம்பியன் பட்டத்தை வென்றது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக அம்பத்தி ராயுடு 74 ரன்கள் எடுத்தார்.

இந்நிலையில்இந்ததொடரில்சாம்பியன்பட்டம்வென்ற இந்திய அணிக்கு ரூ. 1 கோடியும், 2வது இடம் பிடித்த வெஸ்ட் இண்டீசுக்கு ரூ. 50 லட்சமும் பரிசுத்தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.